வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின்செயல்முறைகள்

ஆணையிடுபவர்: திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி, இ.ஆ.ப.,

ந.க.எண்.A41/2024 நாள்: 30.12.2024

பெறுநர்

முதன்மை கல்வி அலுவலர் அவர்கள்

வேலூர் மாவட்டம்.

பொருள் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை சிறப்புற கொண்டாடும் வகையில் 2024-2025 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வேலூர் மாவட்ட பிரிவின் சார்பாக 04.01.2025 அன்று மிதிவண்டி நடத்துவது அனுமதி கோருதல் - சார்பாக.

பார்வை

1. உறுப்பினர் செயலர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் செ.மு.ஆ.எண்1018/ஓய்டபிள்யு.1/2024, நாள் 23.12.2024
2. பேரறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டி நடத்துவது தொடர்பாக - மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்ற நாள் 27.12.2024.

ஆணை:

பார்வையில் காணும் கடிதத்தின்படி முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை சிறப்புற கொண்டாடும் வகையில் அறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15 ஆம் தேதி அன்று நடத்தப்பட்டு வருகிறது. தற்போது அறிஞர் அண்ணா பிறந்த தினத்தினை கொண்டாடும் வகையில் அறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டி இந்த நிதியாண்டில் நமது வேலூர் மாவட்டத்தில் 04.01.2025 அன்று காலை 6.00 மணியளவில் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பின்வரும் கூடுதல் விவரங்கள் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கனிவான பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மாவட்ட அளவிலான மிதிவண்டி போட்டிகள் கீழ்காணும் பட்டியலின்படி மாணவர்கள் மற்றும் மாணவிகளின் வயது வரம்பு பட்டியல் இருக்க வேண்டும்.

| வ.எண் | வயது வரம்பு | ஆண்கள் | பெண்கள் | பிறப்பு வருடம் |
|---|---|---|---|---|
| 1. | 13 வயதுக்குட்பட்டவர்கள் | 15 கி.மீ. | 10 கி.மீ. | 2012 மற்றும் அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். |
| 2. | 15 வயதுக்குட்பட்டவர்கள் | 20 கி.மீ. | 10 கி.மீ. | 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டிற்குள் பிறந்தவராக இருக்க வேண்டும். |
| 3. | 17 வயதுக்குட்பட்டவர்கள் | 20கி.மீ. | 10 கி.மீ. | 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டிற்குள் பிறந்தவராக இருக்க வேண்டும். |

இப்போட்டியில் பங்கேற்றிடும் மாணவ, மாணவியர்கள் இந்தியாவில் தயாரான சாதாரண மிதிவண்டிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். போட்டியில் பங்கு பெற பதிவு செய்ய பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொள்ளும் வகையில் போட்டிகள் நடைபெறும். பள்ளி, மாணவ, மாணவியர்கள் பிறப்புச் சான்றிதழ் மற்றும் ஆதார் அட்டை அசல் மற்றும் நகலுடன் மாவட்ட விளையாட்டு அலுவலகத்திற்கு நேரடியாகவோ அல்லது 7401703483 என்ற வாட்ஸ்அப் எண்ணிலோ 03.01.2025 மாலை 5.00 மணிக்குள் பதிவு செய்ய கடைசி நாள் ஆகும் . இப்போட்டிகள் 04.01.2025 அன்று காலை 6.00 மணிக்கு நடத்தப்பட உள்ளது . காவல்துறை, மருத்துவத்துறை, பள்ளி கல்வித்துறை, உயர்கல்வித்துறை, உள்ளாட்சி அமைப்பு ஆகியோருடன் இணைந்து இந்த பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மேற்கொண்டு போட்டிகள் நடத்தப்படும். இப்போட்டியில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுத்தொகை தலா ரூ.5000, ரூ.3000, ரூ.2000 வீதமும் 4 முதல் 10- ஆம் இடம் வரை வெற்றி பெறுபவர்களுக்கு தலா ரூ.250/- வீதம் பரிசுத்தொகை மற்றும் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படும் .போட்டிகள் பிரம்மபுரம் shrishti school பள்ளி நுழைவு வாயிலில் தொடங்கப்பட்டு காரணாம்பட்டு மேம்பாலம் வரை உள்ள சாலையில் நடத்தப்பட உள்ளது. பங்கேற்பாளர்கள் 04.01.2025 காலை 5.30 மணிக்குள் போட்டி நடைபெறும் இடத்திற்கு வந்தடைய வேண்டும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. போட்டிகள் குறித்த விவரத்தினை நாளிதழ்கள் மூலம் பரப்பிட உத்தரவிடப்பட்டுள்ளது .

ஒம்/- வே.இரா.சுப்புலெட்சுமி
மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர் மாவட்டம்.

/ஆணைப்படி/

30/12/24

மாவட்ட ஆட்சியருக்காக.